| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>அருள் பிரகாஷ் | அ.வ.எண்.263/2015 | 01.07.2025 |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) ஜெயலெட்சுமி என்பவர் எந்த தேதியில் உயில் எழுதினார் என்றால் 23.06.2020 தேதியில் எழுதி வைத்தார். மேற்படி உயில் பத்திரம் தயார் செய்யும் போது நீங்கள் இருந்தீர்களா என்றால் இல்லை. மேற்படி உயில் பத்திரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்று ஜெயலெட்சுமி உங்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். உயிலில் கண்ட சொத்து விவரம் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி கையொப்பம் இட உங்களை யார் கூப்பிட்டது என்றால் ஜெயலெட்சுமி கூப்பிட்டார். மற்றொரு சாட்சி யார் என்றால் பாண்டி செல்வன்.

2) நீங்கள் சாட்சி கையொப்பம் போட்ட இடம் எது என்றால் அரியலூர் சார்பதிவாளர் அலுவலகம், நீங்கள் சாட்சி கையொப்பம் போடும் போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் நான், பாண்டி செல்வன், ஜெயலெட்சுமி மற்றும் வழக்கறிஞர் ஒருவர். அந்த உயிலில் ஜெயலெட்சுமி கையொப்பம் செய்தாரா அல்லது கை ரேகை வைத்தாரா என்றால் கையொப்பம் போட்டார். உயிலில் நீங்கள் எத்தனை சாட்சி என்றால் முதல் சாட்சி. அந்த உயிலை தவிர ஜெயலெட்சுமி அம்மாளின் சொத்து விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.